பக்கங்கள்:10

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 13 புதன்கிழமை 26.01.2022 கதிர் 82

இனிது ரகசியம் அல்ல!

ராஜபக்ஷக்களோடு நின்று பிடிக்கப்போகும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதுதான் இப்போது தென்னிலங்கை அரசியலில் பிரதான பேசுபொருள்.

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸாவா? அல்லது அத்தரப்பில் அவருக்கு ☞ 2

# நோய் அறிகுறிகள் அற்ற அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம்



## 50 சதவீதமானவர்கள் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் அதிர்ச்சித் தகவல்

நாட்டில் தற்போது நோய் அறிகுறிகள் அற்ற அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். அவர்களில் 50 சதவீதமானவர்கள் ஒமிக்ரோன் திரிவை உடையவர்களாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாளாந்தம் 800 இற்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் ☞ 9

# யாழ் புதிய பஸ் நிலையம் பெப்.01 முதல் இயங்கும்

## அங்கஜன் இராமநாதனின் கோரிக்கைக்கு இணங்கியது வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்



யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்திலிருந்து வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் எம்.பி. இது தொடர்பில் முன்வைத்த கோரிக்கை மற்றும் சமரசத் திட்டத்தை ஏற்றுச் செயற்பட வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது. ☞ 9

## சுவாசப் பிரச்சினை காரணமாக பண்டத்தரிப்பில் சிறுமி மரணம்

யாழ்.பண்டத்தரிப்பில் திடீர் சுகயீனம் காரணமாக வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறுமி ஒருவர் சுவாசிக்கச் சிரமப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சிறுமி நேற்றுக் காலை சுகயீனம் காரணமாக சங்கானை பிரதேச வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சுவாசிக்கச் சிரமப்பட்டு உயிரிழந்துள்ளார். ☞ 9

## அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்ட சகலருக்கும் சலுகை வழங்கியே தீருவேன்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



நான் ஆட்சிக்கு வந்ததும் முதலாவதாக முன்னெடுக்கும் பணியானது அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு சலுகை பெற்றுக் கொடுப்பதாகும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார்.

பூலோக ☞ 9


## தயா மாஸ்டருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருடச் சிறை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராகச் செயற்பட்ட தயா மாஸ்டர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், தடைசெய்யப்பட்ட அமைப்பான தமீழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமைக்குத் தயா மாஸ்டருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கைதான 55 இந்திய மீனவர்கள் நேற்று பிணையில் விடுவிப்பு!



(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பில் கைதான 55 இந்திய மீனவர்கள் நேற்று நிபந்தனையுடன் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு மற்றும் ☞ 9

# அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு விரைவில் தீர்வு!

## நீதி அமைச்சர் அலி சப்ரி உறுதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் எவரையும் அரசியல் கைதிகள் என அடையாளப்படுத்த நாம் விரும்பவில்லை. எனினும், இந்த விவகாரத்துக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களை செய்வதன் மூலம் விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க அரசு தயாராக இருக்கின்றது.

- இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நேற்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நடமாடும் நீதிக்கான அணுகல் சேவை வேலைத்திட்டம் தொடர்பில் நேற்று நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைக்கைதிகளும் மனிதர்களே என்ற வாசகத்தை ☞ 9

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக முரண்டு பிடித்து நிற்கும் சம்பிக்க ரணவக்கவா? அல்லது முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவா?

அடுத்த ஜனாதிபத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியே தனது வேட்பாளரை நிறுத்தும், அது நான்தான் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேரத்துடனேயே அறிவித்து விட்டார்.

நீண்ட காலமாகத் தங்கள் தரப்பை விட்டுப்போயிருக்கும் ஜனாதிபதி பதவியை – அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் போது அது முப்பது ஆண்டுகளாக இருக்கும் – எப்படியாவது மீண்டும் அடைந்து விட வேண்டும் என முன்னாள் ஐ.தே.கவினரான – இப்போதைய ஐக்கிய மக்கள் சக்தியினர் – துடியாய்த் துடித்துக் கொண்டு நிற்கின்றனர்.

பொது வேட்பாளர் என்ற பெயரில் ஒருவரைக் கொண்டு வந்து வெற்றி பெற வைத்தும், தாங்கள் எதிர்பார்த்தபடி எதுவும் கிடைக்கவில்லை – கிட்டவில்லை – என்ற ஆதங்கம் அவர்களுக்கு.

அதற்காக அவர்களும் சஜித்தான் தங்கள் வேட்பாளர் என்ற கருத்தில் நிற்கின்றனர்.

ஆனாலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த ராஜபக்ஷ களத்தில் நின்றாலும் அவரைத் தோற்கடிக்கக் கூடிய 'கரிஸ்மா' மிக்க தலைவராக சஜித் பிரேமதாஸா தெற்கில் திகழுகின்றாரா என்று கேட்டால் பதில் சந்தேகம்தான்.

அதேசமயம், ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித் பிரேமதாஸாவுக்குப் போட்டியாகத் தம்மைக் கருதிக் கொண்டு சம்பிக்க ரணவக்க கிளர்ந்தாலும், அவரது எழுச்சி அப்படி ஒன்றும் மக்களை கவர்ந்திழுக்கும் விவகாரமாக உருவெடுத்து விடவில்லை. தமது '43ஆவது படையணி' என்ற இயக்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டத்தை பெரும் ஆர்ப்பாட்ட எடுப்புகளோடு கடந்த வாரம் அவர் நடத்தினராயினும் அவர் எதிர்பார்த்த கிளர்ச்சியை அது தெற்கில் தந்துவிடவில்லை என்கின்றன கொழும்பு வட்டாரங்கள்.

அந்த நிகழ்ச்சிக்கு கரு ஜயசூரிய, ஐ.தே.கவின் சார்பில் சாகல ரட்ணாயக்கா, ருவான் விஜேவர்த்தனா மற்றும் குமார வெல்கம, மனோ கணேசன் போன்றோர் வந்திருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சக எம்.பிக்கள் எல்லோரையும் பங்குபற்றும்படி சம்பிக்க அழைத்திருந்தாராயினும் அந்த நிகழ்வுக்கு சஜித் போகாத நிலையில் ஏனைய எம்.பிக்கள் எல்லோரும் மெல்ல அதில் பங்குபற்றாமல் கழன்று கொண்டனர். தமது கட்சியின் சார்பில் கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவையும், அவருடன் கட்சிக்குள் நெருக்கமாகச் சேர்ந்தியங்கும் தலதா அத்துகோறளையையும் மட்டும் அந்நிகழ்வில் பங்குகொள்ள சஜித் அனுமதித்திருந்தார் என்று கூறப்படுகின்றது. அதனால் அவர்கள் இருவரும் அதில் பங்குபற்றினர்.

தமது வழமையான ஆதரவாளர்களைத் திரட்டி சம்பிக்க ரணவக்க ஒரு சிறிய திருவிழாவை நடத்திய திருப்தியுடன் விவரம் அடங்கி விட்டது.

பிரதம நீதியரசர் சர்ச்சையில் கூட மிகத் துணிச்சலாகவும், மிக நேர்மையாகவும் செயற்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டால் அவருக்குப் பிரகாசமான வாய்ப்பு இருப்பதாக என் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். நாடறிந்த – நல்ல பெயருடைய – துணிச்சலான – தலைவர் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் பதித்தவர் அவர். 'எனது நாட்டுக்குப் பயனுள்ள ஏதாவது ஒன்றை நான் செய்வதற்கான வேளை வந்துவிட்டது' – என்று தமக்கு நெருக்கமானோரிடம் அவர் கூறி வருகின்றார். பொதுவேட்பாளராக நிற்கும்படி அழைப்பு வந்தால் அதை ஏற்பேன் என்பதற்கான சமிக்ஞைதான் இது.

ஆனால், ராஜபக்ஷக்களின் பிடியைத் தளர வைப்பதற்கு மக்கள் ஆதரவும், வசீகரமும் மிக்க – வரவேற்புப் பெற்ற – பொது வேட்பாளர், ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்ற இணக்கத்துக்கு எதிரணிகள் ஒன்றுபட்டு வந்தால்தான் ஷிராணி பண்டாரநாயக்க களத்தில் குதிப்பதற்கு வாய்ப்புண்டு. அப்படி நேர்ந்தால் அது ராஜபக்ஷக்களுக்குக் கெட்ட காலம்தான்; கெடுகாலம்தான்.

ஆனால், எதிரணித் தரப்பில் – சஜித் உட்பட்ட தரப்புகளுக்கு இருக்கும் பதவி ஆசை அதற்கு விடாது. அதுதான் ராஜபக்ஷக்களுக்கு உள்ள நல்ல காலம்...!

★ ★ ★

தனக்குத் தெரிந்த சிங்கள மொழி ஆளுமையை வைத்துக் கொண்டு தென்னிலங்கையில் அடாவடித்தனமான கருத்துக்களைப் பீற்றித் திரியும் தமிழ் எடுபிடி ஒன்று குறித்து நம் மக்களுக்குத் தெரியும். தலைவர் பிரபாகரனை 'அவன்', 'இவன்' என்று ஒருமையில் திட்டித் தீர்த்தபடி, தென்னிலங்கையில் இருந்து பஸ்ஸில் ஆள்களைக் கூட்டமாகக் கூட்டி வந்த வடக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தும் தென்னிலங்கையின் இந்தக் கைக் கூலியை தமிழ் மக்கள் நன்கறிவர்.

என் பத்தியில் அந்தப் பிரகிருதி குறித்து குறிப்பிடுவதற்கே லாயக்கு இல்லை என்பதால் அவர் பற்றிய செய்தி குறித்து நான் எப்போதுமே அலட்டிக் கொள்வதில்லை.

ஆனால், தனக்குத் தெரிந்த சிங்களத்தை வைத்துக் கொண்டு அந்த வாய்ச் சவடால் பேர்வழி பண்ணிய தப்பிலித்தனத்தினால் பொலிஸ் சேவையில் அண்மையில் நுழைந்த தமிழ் இளைஞர்கள் எல்லோருக்கும் சிக்கல் என்று

☞9




# துயர் பகிர்கின்றோம்



இதய சங்கமம் நிகழ்ச்சியின் மூலம்
நேய நெஞ்சங்களில் நிறைந்த ஊடகவியலாளர்

**அமரர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்**
(1962.01.15 – 2022.01.13)



**அமரர்.அம்பிகாவதி சிதம்பரப்பிள்ளை**
(1940.07.23 – 2022.01.21)

யாழ், கிளிநொச்சி மண்ணின் புகழ்பூத்த மேனாள் அதிபர், அமரர் தம்பு சிதம்பரப்பிள்ளை அவர்களின் மகனும், மனைவியும், கிளிநொச்சியின் மூத்த கிராம அலுவலர் [ஓய்வுநிலை] திரு.சின்னையா பரமதாஸ் [கண்டாவளை] அவர்களின் மருமகனும், சகோதரியும், ஊடகவியலாளர் திருமதி.வாசுகி சிவகுமார் அவர்களின் கணவரும், மாமியும், கிளி/ஆனையிறவு அ.த.க.பாடசாலை அதிபர் திரு.சிதம்பரப்பிள்ளை நந்தகுமார் அவர்களின் சகோதரனும், தாயாருமான இவ் இருவரினதும் இழப்பின் வலி சுமந்து நிற்கும் அவர்தம் உறவுகளின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

*அதிபர் சிதம்பரப்பிள்ளை நந்தகுமாரின்*
*யாழ், கிளிநொச்சி மாவட்ட நண்பர்கள்.*

# தேசிய மின்விநியோக கட்டமைப்பு மீதான நம்பிக்கையை மக்கள் இழந்து விட்டனர்

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



பொது மக்களுக்கு தேசிய மின்விநியோக கட்டமைப்பு மீதான நம்பிக்கை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

மின்விநியோகம் தொடர்பிலான உத்தரவாதத்தை எவராலும் வழங்க முடியாத நிலைமை தற்போது தோற்றம் பெற்றுள்ளது என சுற்றாடற்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

நாடுதழுவிய ரீதியில் மின் விநியோகம் தடைப்படுமா அல்லது தடைப்படாத என்று மின்பாவனையாளர்கள் எண்ணும் நிலைமை தற்போது காணப்படுகிறது. பொது மக்களுக்கு தேசிய மின்விநியோக கட்டமைப்பு மீதான நம்பிக்கை குறைவடைந்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறையில் செயற்படுத்த தவறியமையே தற்போதைய மின் விநியோக பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது.

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்கத் தற்காலிக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தொடர்ந்து மின்விநியோகம் சீராக வழங்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் வழங்க முடியாது.

மின் உற்பத்தி மற்றும் மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு எவரையும் குறை கூற முடியாது.

மின்சாரத்துறை தொடர்பில் சிறந்த செயற்திட்டத்தை வகுக்காமல் இருப்பதன் விளைவை தற்போது எதிர்க்கொண்டுள்ளோம்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 70 சதவீதமாக அதிகரிக்கப்படும் என அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார்.

# பெருந்தோட்ட சுகாதாரத் துறை முழுமையாக மேம்படுத்தப்படும்

## ஜீவன் தொண்டமான் உத்தரவாதம்



பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்கள் முழுமையாக மேம்படுத்தப்படும். அதன் நிமித்தமே சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்றுள்ளது. இதன்மூலம் எமது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார் .

கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த் தகவலை வெளியிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு -

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுடன் அண்மையில் நாம் பேச்சு நடத்தியிருந்தோம். இதன்போது பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அதில் பிரதானமாகப் பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்களை அரசு பொறுப்பேற்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

அந்தவகையில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல முன்வைத்திருந்த நிலையில் அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு எமது மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள சுகாதார நிறுவனங்கள் முறையாக இயங்கவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளும் உரிய வகையில் இல்லை. இந்நிலையில் 450 சுகாதார நிறுவனங்களில் முதற்கட்டமாக 59 ஐ அரசு பொறுப்பேற்று, நிர்வகிக்க உள்ளது. இதன்மூலம் எமது மக்களுக்கு உரிய சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எஞ்சிய சுகாதார நிறுவனங்களையும் அரசு விரைவில் பொறுப்பேற்கும்.' - என்றார்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப்பதவிக்கு புதியவர் இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கின்றமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு - விரைவில் தேசிய சபைக் கூட்டப்படும். அந்தக் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும். - என்று ஜீவன் தொண்டமான் பதிலளித்தார்.

# வடக்கு கண்ணிவெடியகற்றலில் ஸார்ப் நிறுத்தால் இதுவரையில் 32 ஆயிரம் வெடிபொருள்கள் மீட்பு!



முல்லைத்தீவு அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி முகமாலை மற்றும் ஆனையிறவிலும் பதினெட்டு லட்சத்து எழுபத்தி நான்காயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழு சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து முப்பத்திரெண்டாயிரத்து இருநூற்று எண்பத்திரெண்டு அபாயகரமான வெடிபொருள்களை இதுவரை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) மேற்படி கண்ணிவெடியகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஸார்ப் நிறுவனம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம், 2022 ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

அந்த வகையில், பதினெட்டு லட்சத்து 74 ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழு சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 32 ஆயிரத்து 282 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

அத்தோடு கிளிநொச்சி பிரதேச வைத்தியசாலையில் ஜனவரி மாதம்; 13 ஆம் திகதி இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தோட்டத் தேயிலை மலையிலிருந்து பதுளையில் பெண் சடலமாக மீட்பு!

பதுளை, வேவெஸ்ஸ பெருந்தோட்ட தெபத்தை தோட்டப் பிரிவிலிருந்து பெண் ஒருவரின் சடலமொன்றை, பதுளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தெபத்தை தோட்டப் பிரிவைச் சேர்ந்த லெட்சுமணன் சந்திரலேகா என்ற 58 வயதுடைய பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார் என பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை - பசறை பிரதான வீதியின் 6 ஆம் மைல் கல்லுக்கு அருகிலுள்ள தெபத்தை தேயிலை மலையிலேயே, குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணொருவரின் சடலம் தேயிலை மலையில் கிடப்பதாக, பதுளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸார் விரைந்து சடலத்தை மீட்டனர்.

இந்நிலையில், சடலம் தற்போது, பதுளை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பெண் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு, கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் எனப் பலத்த சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக, விசாரணைகளை மேற்கொண்டுள்ள பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், பொலிஸார் பல்வேறு கோணங்களில், இந்த மரணம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு

கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் இன்று 25.01.2022 செவ்வாய்க்கிழமை காலை சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நடைபெற்றது.

முதல்வர் பிரதிஅதிபர் மற்றும் ஆசிரியை ஆகியோர் சின்னம் சூட்டுவதையும் மாணவத் தலைவர் உரையாற்றுவதையும் மாணவர்கள் கலந்து கொண்டமையையும் படத்தில் காணலாம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இலங்கையின் இரக்கமற்ற போர்

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை மண்ணில் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டாலும், வெளிநாடுகளில் அந்த அமைப்பு செயற்படுகின்றது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

புலிக் கிலியிலிருந்து தாங்கள் இன்னும் விடுபடவில்லை என்று அரசியல் நடிப்புக் காட்டுகின்றார் அவர்.

விடுதலைப் புலிகள் தங்கள் இலக்கை அடைய எடுத்துக் கொண்ட வழிமுறைதான் சர்வதேச ரீதியில் விமர்சிக்கப்பட்டனவே தவிர அவர்களது இலக்குகள் அல்ல.

அது மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளின் தீரம் மிக்க போராட்டக் காலத்தில், 'புலிகளே தமிழ் மக்கள்; தமிழ் மக்களே புலிகள்' என்ற நிலைப்பாடே நிலவியது.

ஆகவே, புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் தோற்றுப்போய்விடவில்லை. அவர்களின் இலக்கும், நீதி, நியாயமான அபிலாஷைகளும் அற்றுப்போய்விடவில்லை. அது கடைசித் தமிழ் மகன் இந்தப் பூவுலகில் மூச்சுவிடும் வரை யதார்த்தமாகத் தொடரவே செய்யும்.

முன்னாள் படைத் தளபதியான இந்நாள் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் தெரிந்தோ தெரியாமலோ ஒப்புக் கொள்ளும் இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

"புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். அத்தோடு அவர்களின் ஆயுதங்கள் இனித் தற்கொலைக் குண்டுகள் மற்றும் பீரங்கிகள் அல்ல. பிரசாரங்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுமே தற்போது அவர்களின் ஆயுதங்கள்" – என்றுரைத்திருக்கின்றார் அவர்.

புலிகளே தமிழ் மக்கள், தமிழ் மக்களே புலிகள் என்ற சிந்தனைப் போக்கில் பார்த்தால் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகே கூறும் இந்த விடயம் முற்றிலும் உண்மைதான்.

சரி. புலிகளின் ஆயுதங்கள் இனித் தற்கொலைக் குண்டுகளோ, பீரங்கிகளோ அல்ல என்றால் அந்தப் புலிகளுக்கு இலங்கை ஏன் இன்னும் இவ்வளவு தூரம் அஞ்சி நடுங்க வேண்டும்? அவர்களின் இப்போதைய ஆயுதங்கள் பிரசாரங்களும் நீதிமன்ற நடவடிக்கையும்தான் என்றால் அவற்றுக்கு ஏன் ஆளும் தரப்பு அஞ்சி நடுங்க வேண்டும்?

இது விடயத்தில் மடியில் கனம் இல்லாது விட்டால் வழியில் ஏன் இலங்கை அரசுக்குப் பயம்? இலங்கையின் நடவடிக்கைகள் நீதி, நியாயமானவையாக – சர்வதேச நியமங்களுக்கு அமைவானவையாக – இருந்திருக்குமானால் புலிகளின் அல்லது தமிழர்களின் பிரசாரத்துக்கும் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கும் என இலங்கை அஞ்சிப் பதறியடித்து இவ்வளவு துடிக்க வேண்டும்?

உண்மையில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கொலம்பகே கூறுகின்றமை போல, அவர் கூறும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போரில்' இங்கு பெரியளவில் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் இடம்பெறவேயில்லை என்றால், அவை தொடர்பான நீதி, நியாயமான நடவடிக்கைகளுக்கு – நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு – கொழும்பு ஏன் அஞ்ச வேண்டும்?

உலகின் மிக மோசமான – இரக்கமற்ற – பயங்கரவாத இயக்கத்துக்கு எதிராக இலங்கை போரிட்டது என்று கூறும் கொலம்பகே, மறுபுறத்தில் அந்தப் போரை வெல்வதற்கு ஒரு சட்ட ரீதியான அரசு தன் மக்களுக்கு எதிராக – உலகில் மிக மோசமான வழிகளில் – இரக்கமற்ற முறையில் – அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது என்ற குற்றச்சாட்டு சர்வதேசத்திடம் உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது.

## முல்லைத்தீவில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞரின் மரணத்தில் சந்தேகம்

முல்லைத்தீவு, ஜன. 26

முல்லைத்தீவு மாவட்டம், மல்லாவி - தேறாங் கண்டல் பகுதியில் இளைஞர் ஒருவர் அவரின் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றினுள் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

மல்லாவி, தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த கணேசன் புஸ்பராஜ் (வயது 23) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

குறித்த சம்பவம் கொலையா? தற்கொலையா:- என்ற கோணத்தில் மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் றோஹண நியமனம்!



பொலிஸ் ஊடகப் பேச்சாளராக மீண்டும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னரும் அவர் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பணியாற்றி வந்தநிலையில் அண்மையில், அந்தப் பதவிக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, அந்தப் பதவிக்கு மீண்டும் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

## சீனாவின் இறக்குமதி அரிசியை உட்கொண்டால் சிறுநீரக நோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு

### அசோக அபேசிங்க சாடல்



சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை உட்கொண்டால் இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று (செய்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க இதனை கூறினார்.

சீனாவில் அதிகளவான இரசாயன உரங்கள் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டினார்.

சீன அரசாங்கம் நன்கொடையாக வழங்கியுள்ள ஒரு மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## வலி.மேற்கு பிரதேசசபைக்கு முன்னால் உறுப்பினர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

வலி. மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமானது. கூட்டத்தை இடை நிறுத்திவிட்டு பிரதேச சபை உறுப்பினர்களும் முன்பள்ளி ஆசிரியர்கள் பிரதேச சபைக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரியும், சம்பள அதிகரிப்பை கோரியும் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

பெண் தலைமைத்துவக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்கள் என பலர் முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றோம்.

30 வருடங்களுக்கு மேலாக சேவையைச் செய்து ஓய்வுபெறும் வயதிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் சேவை புரிந்து வருகின்றனர்.

நமக்கு வெறும் ஆறாயிரம் ரூபாவே வேதனமாக வழங்கப்படுகின்றது. தற்கால விலைவாசி அதிகரித்து காணப்படுகிறது. இந்த ஆறாயிரம் ரூபா ஆறு நாள்களுக்காவது போதுமா?

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என நாங்கள் கடந்த பிரதேச சபை அமர்வில் தீர்மானம் எடுத்துள்ளோம். அந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம்.

ஒரு குழந்தை தாயிடம் இருந்து அடுத்த படியாக முன்பள்ளி ஆசிரியர்களிடமே வருகின்றது. ஒரு தாய் செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும் நாங்கள் அந்த மாணவர்களுக்கு செய்கின்றோம். ஆனால் எங்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

எனவே, புதிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு நமது பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும் - என்றனர். போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## புத்தகக் கண்காட்சி பதுளையில் ஆரம்பம்

'பிறபுத்த' கலாசார அறக்கட்டளை மற்றும் பதுளை மாநகர சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்யும் வருடாந்த 'பதுலு புத்தக வசந்தம்' பதுளை புத்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு பதுளை சேனநாயக்க பூங்காவில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த புத்தகக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை முதல் 30 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பதுளை சேனநாயக்க பூங்காவில் நடைபெறும் என ஏற்பாட்டளாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னணி புத்தக வெளியீட்டாளர்களின் பங்கேற்றலுடன் நடைபெறும் இந்த புத்தகக் கண்காட்சியில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான புத்தகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை புத்தகங்களை கொள்வனவு செய்பவர்களுக்கு 20 வீத விசேட தள்ளுபடிகள் வழங்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

ஆரம்ப நிகழ்வில் பதுளை நகர மேயர் டபிள்யூ.டி. பிரியந்த அமரசிறி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர் வியாழேந்திரனின் தொலைபேசி அழைப்புத் தொடர்பில் விசாரணை செய்க!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மன்றில் ஆஜர்



கொலை செய்யப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தரத்தின் கொலை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் கையடக்கத் தொலைபேசி அழைப்பு தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டின் முன்னாள் சுட்டுக்கொல்லப்பட்ட மகாலிங்கம் பாலசுந்தர படுகொலை தொடர்பில் நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி என். கமலதாஸ் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி. றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற வேளையில் இராஜாங்க அமைச்சர் தன்னுடைய வீட்டிலிருந்தார் என்றும் அதன் பின்னரே அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார் என்ற தகவலும் இருக்கும் காரணத்தால் இரண்டு விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும் என்று நீதிவானிடம் கோரியிருக்கின்றோம்.

இராஜாங்க அமைச்சர் எப்போது வீட்டைவிட்டு வெளியேறினார் என்பதை அறிவதற்காக வீதிகளில் உள்ள சிசிரிவி காட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும்.

குறித்த வழக்கு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முறையாக முன்னெடுக்காத காரணத்தால் மேற்படி வழக்கு கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதிவான் தெரிவித்தார் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முதன் முதலில் தொடர்பை ஏற்படுத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அந்த அழைப்பை எடுத்த இடம் மற்றும் வழியில் இருந்த சிசிரிவி காணொளிகளை உடன் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளால் முன் வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த வழக்கானது எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# 3 டோஸ்களையும் பெற்றவர்களே பூரண தடுப்பூசி பெற்றவர்களாவர்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

நாட்டில் இனிவரும் காலங்களில் பூஸ்டர் தடுப்பூசி உள்ளடங்கலாக மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்களே பூரண தடுப்பூசி பெற்றவர்களாக அங்கீகரிக்கப்படுவர்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் விழுந்து குடும்பஸ்தர் பரிதாபச் சாவு!



புத்தளம் – ஆராச்சிக்கட்டுவப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பத்துளுஓயா – மகாமாலிய பகுதியைச் சேரந்த 51 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குறித்த நபர் நேற்று முன்தினம் (திங்கட் கிழமை) காலை இறால் பண்ணையில் இறால்களுக்கு காலை நேர உணவை வீசிக் கொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த நபர் இறால் பண்ணை நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்த இறால் பண்ணையின் உரிமையாளர் இது தொடர்பாக ஆராச்சிகட்டுப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். குறித்த தகவலின் அடிப்படையில் அங்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அத்துடன், அங்கு வருகை தந்த ஆராச்சிக் கட்டுப் பிரதேச திடீர் மரண விசாரனை அதிகாரி சம்பவ இடத்தில் மரண விசாரணையை மேற்கொண்டபின்னர், சடலத்தைபிரேதபரிசோதனைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆராச்சிக் கட்டுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் பிரதி அமைச்சரின் மகன் போதைப்பொருளுடன் கைதானார்!

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஹமட் லேன் பகுதியில் ஹஸீஸ் போதைப் பொருள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்கடந்ததிங்கட்கிழமைமாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை மாவட்ட முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் என்பவரின் மூத்த மகனான (வயது – 31) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலை பிராந்தியத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து குறித்த சந்தேகநபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஹசிஸ் என்று அழைக்கப்படும் போதைப்பொருள் ஒரு கிரேம் 170 மில்லி கிராம் மற்றும் ஹெரோயின் 150 மில்லி கிராம் கைப்பற்றப்பட்டன எனவும் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டகுறித்தசந்தேகநபரைபோதைப்பொருளுடன் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். குறித்த சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன எனவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டில் தண்ணீருக்கும் நெருக்கடிநிலை வரலாம்!

எதிர்காலத்தில் குடிதண்ணீர்; நெருக்கடி நிலை ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏகநாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அதனைக் குறைப்பதற்கு தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து குடிதண்ணீரைப் பயன்படுத்துமாறும் அவர் மேலும் மக்களை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபின் போதைப்பொருளுடன் வாழைச்சேனையில் கைது



வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓபியம் அபின் போதைப்பொருளுடன் கல்குடாவைச் சேர்ந்த 72 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான 460 கிராம் ஓபியம் அபின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதனைக் கடத்திச்செல்லப் பயன்படுத்திய ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த போதை வியாபாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புலோப்பளையில் வீடு தீக்கிரை பொருள்கள் எரிந்து நாசம்!

புலோப்பளை கிழக்கில் வீடு ஒன்று தீக்கிரையான சம்பவம் நேற்று முன்தினம் (திங்கட் கிழமை) காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்ததீவிபத்துசம்பவத்தில் வீட்டில் இருந்த சொத்துக்கள் எரிந்து சேதமடைந்துள்ளன.

குறித்த சம்பவத்தில் வீட்டில் இருந்தஎவருக்கும்பாதிப்புஏற்படவில்லை எனக் பொலிஸார் தெரிவித்தனர். வீடு எரிந்துகொண்டிருந்த சமயம் பளை பொலஸார் வீட்டை உடைத்து தீ பரவலைக் கட்டுப்படுத்தினர். மின் ஒழுக்கு குறித்த விபத்துக்கு காரணமாக இருக்கலாம்எனநம்பப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 300 கிலோ ஹெரோயினுடன் கடற்பரப்பில் 6 பேர் கைது

இலங்கையின் தென் கடற்பரப்பில் 300 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை ஏற்றிச் சென்ற இழுவை படகு ஒன்று மடக்கிப் பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்எனக்கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்திருந்த நிலையில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும் கடற்படையினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விரைவில் கரைக்கு அழைத்து வரப்படுகின்றனர் எனவும், அவர்களிடம் விசாரணை நடத்தியதன் பின்னர் ஹெரோயின் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 263

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**670.சம்பந்தன் தற்போது ராஜ பக்ஷக்களிடம் நீதி கிட்டவே கிட்டாது, சர்வதேசத் தலையீடுதான் இனித் தீர்வுக்கு ஒரே வழி என்பதும், 34 ஆண்டுகளுக்கு முன் நிராகரித்த 13 ஆவது திருத்தத்தை இனப்படு கொலையின் பின் கோருவது என்ன நியாயம் என்று கஜேந்திரகுமார் கூறுவதும் எதைக் குறிக்கின்றன?**

75 வருடங்களாக சமஷ்டிதான் தமிழ் மக்களுக்கான தீர்வு என்று தமிழரசுக் காலங்களிலிருந்து தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் சொல்லி வந்தும் கூட நடைமுறையில் ஏதும் நடந்ததா?

நாங்கள் சிங்களத் தலைவர்களை



சம்பந்தன்

நம்பினோம். அவர்கள் ஏமாற்றி விட்டார்கள். ஆனால் எங்களது கோரிக்கையை உரக்கமாக சொல்லுவோம் என்றுதான் ஒவ்வொரு தேர்தலுக்கும் போனார்கள். இப்பொழுது அதையே தான் சம்பந்தன் '13' பற்றிய தங்கள் பொங்கல்களுக்குப் பிறகு கொஞ்சம் உயர்த்திய தொனியில் சொல்லுகிறார்.

ஆனால் சில மாதங்களில் சுமந்திரன் உள்ளக சுயநிர்ணய உரிமையை பேசித் தீர்த்தகின் பின்தான் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல அப்படியே இவை இழுக்கப்படும்.

எத்தனை சுற்றுப் பேச்சுக்கள் உள்ளக சுயநிர்ணயத்துக்காக பண்டா - செல்வா ஒப்பந்தத்திலிருந்து நோர்வே சமாதானம் வரை நடந்தாயிற்று?

எப்படி சமஷ்டியில் தமிழரசுக் கட்சியினர் காலத்தை ஓட்டினார்களோ, அதேபோல் கஜேந்திரகுமாரும் இனப்படுகொலை என்று காலத்தை ஓட்டி வருகிறார். அதற்கு அவர் 13ஆவது திருத்தத்தைப் பற்றியோ, ஒப்பந்தங்கள் பற்றியோ பேச மாட்டார். சமஷ்டிதான் தீர்வு என்பது போல - இனப்படுகொலைதான் நடந்தது என கோஷத்தை எழுப்பியமை தவிர கஜேந்திரகுமார் அதை எங்கே நிரூபித்திருக்கிறார் அல்லது அதை நிரூபிக்க எந்த வழிவகைகளை எடுத்திருக்கிறார் எனச் சொல்வதில்லை. இனப்படுகொலை என நிரூபிக்கப்பட்டால் பரிகார ரீதியில் தீர்வுகள் சுயநிர்ணய அடிப்படையில் அமையலாம். ஆனால் அது முதலில் நிரூபிக்கப்பட வேண்டும். கஜேந்திரகுமார் நடந்தது அதுதான் என்று பேசுவதிலே பயனில்லை. அதனைச் சட்ட பூர்வமாக்குவதற்கான வழிவகைகளை யதார்த்தமாக முன்னெடுத்தல் வேண்டும்.

இனப்படுகொலை என நிரூபிக்கப்படுவதற்கு, ஐ.நா.பாதுகாப்பு சபையால் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்கு அவ்விடயத்தைப் பாரப்படுத்த வைத்து அவர்கள் அந்தத் தீர்மானத்துக்கு சட்டபூர்வமாக வரவேண்டும். அதில் இருக்கின்ற வழிமுறைகளோ, அதற்கு எடுக்கக்கூடிய காலங்களோ கஜேந்திரகுமார் அறியாதவையல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் மன்றின் கடந்த கூட்டத்திற்கு முன் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, மன்றிலிருந்து அதன் ஆராய்வை வெளியேயெடுத்து அதனைத் திரும்ப ஐ.நா.வின் காரியதரிசிக்குப் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை கஜேந்திரகுமார் பரப்பின் நிர்ப்பந்தத்தால் முன்வைக்கப்பட்டது. இவையெல்லாம் வெற்று வேட்டுக்களே. அப்படியான சமர்ப்பணங்களால் - அதனை தமிழ்த் தரப்புகள் கேட்பதால் - இவை மீளப்பெற முடியாதெனக் கையெழுத்து வைத்து அனுப்பிய எல்லா சட்டத்தரணிகளும் தெரிந்து கொண்டிருந்தார்கள். ஆனாலும் அரசியலுக்காக அது செய்யப்பட்டது. இந்த ஆராய்வு, ஐ.நாவின் அங்கத்துவ நாடான ஸ்ரீலங்காவுக்கு எதிராக அதனது மனித உரிமை மீறல்களை ஓட்டி எடுக்கப்படும் நடவடிக்கை. இதில் தமிழ் மக்கள் சாட்சிகளே ஒழிய, மனுதாரர்கள் அல்லர். பார்வையாளர்களாகத்தான் இருக்கலாம். ஆகவே தமிழ் மக்களது கைகளில்தான் இதன் முடிவுகளெல்லாம் உண்டு என்பது எல்லாம் வீண் வீறாப்புக்களே.



பிரபாகரன்

தற்சமயம் இரண்டு சமர்ப்பணங்கள் தமிழ்ப் பரப்புகளால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டுள்ளன. சமர்ப்பித்தவர்களுக்கும் கஜேந்திரகுமாருக்கும் இருக்கக் கூடிய அனுசரணைகள் தெளிவில்லை. அது முக்கியமுமல்ல. அந்தச் சமர்ப்பணங்கள் இரண்டுமே இனப்படுகொலை என்ற அடிப்படையில், ரோம் சட்டத்தின் பிரகாரம் நாடு திரும்பும் உரிமைகள் மறுக்கப்படுவது, அத்துமீறி நாடு கடத்தப்படும் சூழ்நிலைகளை உருவாக்கல் என்ற சரத்துக்களின் கீழ் தான் பதியப்பட்டுள்ளன. அந்த சமர்ப் பணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**671.கஜேந்திரகுமார் 13 ஆம் திருத்தம் ஒற்றை ஆட்சியின் அடிப் படையில் அமைகிறது, இரட்டை ஆட்சியில்தான் எந்தத் தீர்வும் அமைய வேண்டும், 'இரண்டு தேசம்; ஒரு நாடு' என ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அறிவித்து இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட சமர்ப்பணத்துக்கு எதிராக புலம்பெயர் அமைப்புகளுடனும் சேர்ந்து எதிர்ப்பும் போராட்டமும் முன்னெடுக்கிறாரே?**

இரண்டு தேசம், சமஷ்டி கட்டமைப்பும் ஆட்சிமுறையும் வரப்போவதை தமிழ் மக்கள் யாரும் எதிர்க்கப்போவதில்லை. அந்த அபிலாஷை நியாயமற்றது என எந்தத் தமிழ் பரப்பும் அதனை ஆதரிக்காமல் விடப்போவதில்லை. ஆனால் தமிழ் மக்கள் இன்றிருக்கும் நிலையில் அவற்றின் யதார்த்தங்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றையாட்சிக்குள்தான் கஜேந்திரகுமார் நாடாளுமன்ற அங்கத்துவத்தை வகிக்கிறார். கட்சி அரசியல் நடத்துகிறார். அவரது கட்சியிலிருந்து மணிவண்ணன், யாழ்ப்பாண மாநகர மேயராக இருந்து அதற்கு இருக்கும் அதிகாரங்களை அமுல்படுத்துகிறார். தனக்கு, தனது பரப்புக்கு பயன்தருவதில் ஒற்றையாட்சியைப் பற்றி பேசாதவர், தமிழ் மக்களுக்குப் பாரிய அதிகாரங்களைப் பெற்றுத்தரக் கூடிய 13 ஆம் திருத்தம், ஒற்றையாட்சியில் இருந்து அமைவதை ஏன் எதிர்க்க வேண்டும்? அது அவரது அரசியலுக்கு சாதகமாக இல்லாததால்தான் அந்த நிலைப்பாடு.

இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து பிரபாகரன் போரைத் தொடங்கி, தமிழ் மக்களை அந்தப் போராட்டப் பாதையில் அழைத்து சென்றபோது நடந்த பேச்சு வார்த்தைகள், ஆதங்கங்கள் பற்றி முன்னர் பதிவிட்டிருந்தேன். இந்தப் பாதை பிரயோசனமானதுதானா, சரியானது தானா எனத் தீர்மானித்து, திருத்திப் பாதைகள் சமைப்பதற்கு அது மக்களது போராட்டமாக அமைந்திருந்தால் - அதற்கு வழியிருந்திருந்தால் - நடந்திருக்கலாம். மக்களை வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய அரசியலில்தான் அது முடிந்தது.

இவை நெருடும்போது 'தப்புத்தாளங்கள்' படத்திற்காக கவிஞன் கண்ணதாசன் எழுதிய "தப்புத்தாளங்கள், வழி தவறிய பாதங்கள், அவை அப்படியாக ஆகுமென்றே அவன் எழுதிய வேதங்கள்" - என்றவரிகள் நினைவில் வரும்.

முன்னர் கடும் போக்காளராக சிங்களப் பெரும்பான்மைக்குத் துணை நின்ற சிங்கள அரசியல்வாதி சம்பிக்க ரணவக்க, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மதிப்பளிக்கப்பட வேண்டும் எனக் குரல்



சம்பிக்க

கொடுக்கும்போது அதைப் பற்றி மனோ கணேசன் தனது முகநூலில் இப்படி ஒரு



கஜேந்திரகுமார்

கேள்விக்குப் பதிவிடுகிறார்.

"முன்னர் கடும் போக்காளராகத் தன்னை வெளிப்படுத்தி வந்த இவர், நியாயமான, நீதியான, பல்லின கலாசார தன்மையை அங்கீகரித்து, பொருத்தமான, உண்மையான "ஜனநாயக அரசாட்சி முறையை உருவாக்க சிங்கள, பௌத்த மக்களை இணங்க வைக்க தக்க வல்லமை - நேர்மை - உள்ளவர் எனத் தாங்கள் எண்ணுகிறீர்களா?"

"இவர் உட்பட 100 இற்கு 100 வீதம் நம்பிக்கைக்கு உரியவர் இங்கு எவருமில்லை.

"எமக்கு முன்னால் தெரியும் எல்லா



மனோ கணேசன்

ஒழுங்கைகளிலும் எச்சரிக்கையுடன் நடைபயின்று பார்க்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

"எப்படி இருந்தாலும் இவர்கள் எவரும் 13 ஆம் திருத்தத்திற்கு அப்பால் செல்லத் தயாராக இல்லை. இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. அதைக் கவனத்தில் எடுத்து, இதைப் பெற்று, எம்மை நிலைப்படுத்திக் கொண்டு, அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதா அல்லது ஒட்டுமொத்தமாக நிராகரித்து விட்டுப் போராடுவதா என்பதே எம்முன் உள்ள தெரிவு.

"மேலும் சம்பிக்கா போன்ற சிங்கள தேசியவாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் சென்று தமிழர்களுக்கான குறைந்த பட்ச கோரிக்கையையாவது நியாயப் படுத்தக் கூடிய வல்லமை இருப்பதாக நம்புகிறேன்."

பொது அறிவுக்குள் அடங்குகின்ற இந்தக் கருத்துக்களையும் ஏற்று, அதிலிருந்து முன்னேற வழிவகை அமைக்கப்பட வேண்டும். ஒரு விரல் பதிக்க இடம்கேட்டு பெருமான் மூன்றாம் அடியாக நரனது தலையில் தனது வலது பாதத்தை வைத்தமை தமிழ் மக்களிடையே நன்கு அறியப்பட்ட புராணக்கதை ஒன்று.

(வளரும்)

# பரீட்சை கடமைகளிலும் அரசியல் தலையீடுகள்!

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு




திருகோணமலை, ஜன. 26

சுயாதீனமாகச் செயற்பட வேண்டிய பரீட்சைக் கடமை நியமனங்களிலும் அரசியல் தலையீடு இடம்பெறுவது இந்த அரசின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் எனத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

திருகோணமலை மாவட்டத்தில் 5 ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமைக்காக நியமனங்கள் செய்யப் பட்டுள்ளன. இந்த நியமனங்களில் வழமைக்கு மாறாக இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளன என அதிபர், ஆசிரியர்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இந்த பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமை யாகப் பின்பற்றப்பட்டு வந்த இனச்சமநிலை பின்பற்றப் படவில்லை. முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

பரீட்சைக் கடமை வழங்கப்பட்ட கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல் மோட்டை, கோமரங்கடவெல போன்ற தூரப் பிரதேசங்க ளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்த வர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நிய மிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிலை திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது.

வழமையாக வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படும் பெயர் பட்டியல்களிலிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய் வதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத் தில் கொள்ளப்பட்டிருக்கும்.

இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. வல யக் கல்விப் பணிப்பாளர்களின் பெயர் பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

அரசியல்ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன எனக் கூறப்படுகின் றது. அதிபர், ஆசிரியர்களின் சிரேஷ்டத்துவம் கவனத்தில் கொள்ளப்படாமல் முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள் உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள் ளனர்.

வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. கலந்து கொண்டோரிடமிருந்து ஒப்பம் பெறப்பட்ட போது பரீட்சை நிலையமோ மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் பெயர்களோ குறிப்பிடப்படாது ஒப் பங்கள் பெறப்பட்டன எனவும் கூறப்படுகின்றது.

பரீட்சைக் கடமை தொடர்பாகத் தெளிவுபடுத்தும் கூட்டம் பகல் 12 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தா லும் மாலை 5 மணி வரை அது நடத்தப்பட்டுள்ளது. கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு கூட வழங்கப் படவில்லை.

இந்தக் கூட்டத்தில் வைத்தும் நியமனங்களில் விருப்பு வெறுப்புகள் காட்டப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டன எனக் கலந்து கொண்டோர் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

ஆளுநர் செயலகத்திலிருந்து வந்த அறிவுறுத்தல் களுக்கமைய பரீட்சைக்கான பிராந்திய இணைப்பாளர் செயற்பட்டதாலேயே இவ்வாறான குறைபாடுகள் இடம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சைக் கடமை களில் இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றாலும் 20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து, வரவு - செலவுத் திட்டம், போர்ட் சிட்டி சட்ட மூலம் எனப் பல விட யங்களில் அரசுக்கு ஆதரவாக இருந்து வரும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தா லும், அவர்கள் இந்த விடயம் தொடர்பாக எதுவித நடவடிக் கையும் தங்களால் எடுக்க முடியாது எனக் கைவிரித்தனர் என சில அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேர்மையாக நடக்க வேண்டிய பரீட்சைக் கடமை களில் இவ்வாறான தலையீடுகளும், இனரீதியான புறக் கணிப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக்களத் தின் நம்பகத் தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்ப தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். - எனத் தெரிவித் துள்ளார்.

## பூட்டியிருந்த வீடு உடைத்து தங்க ஆபரணங்கள் திருட்டு

மட்டக்களப்பு - கல்லடி டச்பார் வீதியில் பூட்டி யிருந்த வீடு ஒன்றின் கூரை ஒன்றைக் கழற்றி அங்கிருந்த 21 பவுண் தங்க ஆபரணங்கள் 70 ஆயிரம் ரூபா பணம் திருடர்களால் திருடப்பட் டன எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள குறித்த வீட்டைச் சேர்ந்த உரிமையாளர் தனது மகனின் பட்டமளிப்பு விழாவிற்காகக் கடந்த 21 ஆம் திகதி வீட்டைப் பூட்டிவிட்டு குடும்பமாகக் கண்டிக்குச் சென்றுள்ளார்.

வீட்டுக்குத் திரும்பி வந்து கதவைத் திறந்த போது வீட்டின் கூரைஓட்டைக் கழற்றி உள் நுழைந்த திருடர்கள் அலுமாரியிலிருந்த 21 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 70 ஆயிரம் ரூபா பணத்தைதிருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் செய் யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் அம் பாறையிலிருந்து மோப்ப நாய்கள் கொண்டுவரப் பட்டு தடயவியல் பிரிவு பொலிஸார் அழைக்கப் பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

## ஊழல், அநீதி, அக்கறையின்மை மூன்றுக்கும் வடக்கில் இடமில்லை!

### ஆளுநர் ஜீவன் தெரிவிப்பு

வட மாகாணத்தில் ஊழல், அநீதி அக்கறை யின்மை ஆகிய மூன்று விடயங்களையும் செயற் படுத்த அனுமதிக்கப்போவதில்லை என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள் ளார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு -

இந்த வருடம் 2022ஆம் ஆண்டு முதலாம் மாதம் நிறைவடைய உள்ள நிலையில் ஆளுநர் அலுவலகத்தில் அர்ப்பணிப்பைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவேன்.

ஆகவே, ஆளுநர் அரசியல் செய்யப்போவதோ அல்லது அரசியலில் ஈடுபடுவதற்கோ ஆர்வம் அற்ற நிலையில் மக்களுக்காக உழைப்பேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சம்பூரில் சூரிய சக்தி மின்னுற்பத்தி நிலையம் இந்தியாவுடன் மற்றுமொரு உடன்படிக்கை!

சம்பூரில் சூரிய சக்தி மின்னுற் பத்தி நிலையமொன்றை அமைப் பதற்கு இந்தியாவுடனான உடன் படிக்கையொன்று கைச்சாத்திடப் படவுள்ளது.

சம்பூரில் சூரியசக்தி மின் உற் பத்தி நிலையமொன்றை ஸ்தா பிப்பதற்காக இந்தியாவின் அரச நிறுவனமான என்.ரி.பி.சி எனப் படும் நேனல் தெர்மல் பவர் கார்ப் பரேன் லிமிடெட் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கைஉயர்ஸ்தானிகர்மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மொத்த மின் உற்பத்தி 4 ஆயிரத்து 300 மெகா வாட்டை விட அதிகரிக்காது என வும், மன்னாரில் 5 ஆயிரம் மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை நிர்மா ணிப்பது தொடர்பிலும் இரு தரப் பினரும் ஆராய்ந்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக் கும் இடையில் மின்சாரத்தை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான மின் கம்பி கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது பாரிய விடயமாக அமையாது எனவும் சுட்டிக்காட் டியுள்ளார்.

# கூட்டுறவு எரிபொருள் நிரப்பும் நிலையம் உரிய முறையில் செயற்படுவதில்லையாம்!

## மன்னார் மக்கள் விசனம்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, சிறுத் தோப்பு பகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங் கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையம் தொடர்ச்சியாக உரிய நேரத்தில் திறக்கப்படாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி தாராபுரம் கிராமத்திலிருந்து பேசாலை வரையிலான குறித்த பிர தான வீதியில் ஒரே ஓர் எரிபொருள் நிரப்பும் நிலையம் மாத்திரம் அமைந்துள்ளது.

மேற்படி எரி பொருள் நிரப்பும் நிலையத்தில் கடந்த சில வருடங்களாக எரிபொருள்கள் போதிய அளவு கையி ருப்பில் இருப்பது இல்லை எனவும், அதனைத் தொடர்ந்து உரிய நேரத்தில் திறக்கப்படுவது இல்லை எனவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் தெரி வித்தவை வருமாறு -

பேசாலை மற்றும் அதனை அண்டிய பல பகுதியில் உள்ள அரச தனியார் பணியாளர்கள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அசமந்த போக்கு காரணமாகப் பெரும் சிரமங்களைத் தொடர்ச்சியாக எதிர் கொண்டுள் ளனர்.

அத்துடன் குறித்த பிரதேசத்தில் உள்ளவர்கள் மீன் பிடித் தொழிலை அதிகம் மேற்கொண்டு வரும் நிலையில், மீன்பிடி தொழிலுக்குத் தேவையான மண்ணெண் ணெயை உரிய முறையில் கொள்வனவு செய்ய முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் கடந்த சில நாள்களாக உரிய நேரத்தில் எரி பொருள் விற்பனை நிலையம் திறக்கப்படுவதில்லை. கடந்த திங்கட்கிழமையும் காலை சுமார் 7.50 மணி அளவில் எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்பட்ட போது அங்கு எரிபொருளைப் பெறுவதற்காகக் காத்திருந்தவர்கள் தாமதம் குறித்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணி யாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அந்தசமயம் தாமதம் தொடர்பாக வினாவிய ஒரு பெண்ணிடம் அங்கு கடமையாற்றுபவர் அநாகரிக வார்த்தையைப் பாவித்து அநாகரிகமாக நடந்து கொண் டார் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள் ளதோடு, இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காப்பெற் வீதிகளில் நெல் உலரவிடும் அவலம் வவுனியா வடக்குப் பகுதியில்!




வவுனியா மாவட்டத்தில் தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அறுவடை செய்த நெல்லை உலர வைப்பதற்கான போதியளவு உலர விடும் தளம் இன்மையால் இந்த வருடமும் காப்பெற் வீதிகளில் நெல் உலர விடும் அவலம் தொடர்கிறது என வவுனியா வடக்கு விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நெல் உலர வைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் நெல்லைக் காய வைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக புளியங்குளம் - நெடுங்கேனி பிரதான வீதியின் பரவலான இடங்களில் இவ்வாறு நெல் உலர விடப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற பல கூட்டங்களில் நெல் உலர வைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாகவே ஈரமாக நெல்லை விற்பனை செய்வதாகவும், ஒவ்வொரு கமக்கார அமைப்புக்கும் குறைந்தது நெல் உலர வைப்பதற்கான ஒரு தளத்தையாவது அமைத்துத் தாருங்கள் என விவசாயிகளால் தொடர்ச்சியாகக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இருந்த போதிலும் அவை நிறைவேறாததன் காரணமாகவே விவசாயிகள் நெல்லை வீதிகளில் உலர வைக்கின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

கடந்த வருடங்களிலும் இந்த நிலைமை தொடர்ந்தது. இந்த நிலைமையால் கடந்த காலங்களில் பல வீதி விபத்துகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு கிலோ நெல் 75 ரூபாவுக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு!

## அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தகவல்



விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அரசாங்கம் நெல் இருப்பைப் பாதுகாப்பாகப் பேணுவதையும் நோக்காகக் கொண்டு பெரும் போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை ஊடாக ஒரு கிலோ நெல்லை தலா 75 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நெல் அறுவடையை கொள்வனவு செய்தல், நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நேரடியாகவும் மாவட்டச் செயலாளர் அல்லது அரசாங்க அதிபர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை இயக்குவதன் மூலமும் மேற்கொள்ளப்படும்.

அதற்குத் தேவையான 29 ஆயிரத்து 805 மில்லியன் ரூபாக்கள் நிதி ஒதுக்கீடு அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும் என்ற யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# கோடரிகள், வாள் மானிப்பாயில் மீட்பு



யாழ்.மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெலக்காய் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள காணி ஒன்றிலிருந்து வாள்கள், மற்றும் கோடரிகளை பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

குறித்த காணியில் மிக இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு 09.30 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரால் மேற்படி ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவத்தில் 2 கஜேந்திர கோடரிகள், நீளமான வாள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளபோதும், எவரும் கைது செய்யப்படவில்லை. அது தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சிமெந்துகளை அதிக விலைக்கு விற்பவர்களுக்கு நடவடிக்கை!

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காண நுகர்வோர் விவகார அதிகாரசபை நாடளாவிய ரீதியில் சோதனைகள் நடத்திவருகின்றது.

அதன்படி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 56 சீமெந்து விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

சீமெந்துகளை விற்பனை செய்ய மறுப்பது, இருப்பு உள்ளபோது பற்றாக்குறையைக் காரணம் காட்டி, பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் விற்பனை செய்தல் மற்றும் பங்குகளை மறைத்து வைப்பது ஆகியவை நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் குற்றங்களாகக் கருதப்படுகின்றன.

அதன்படி, சட்டத்தை மீறும் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.



# ஓட்டோ சாரதி ஒருவர் சடலமாக மட்டக்களப்பு பார் வீதியில் மீட்பு!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார்வீதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை ஓட்டோ சாரதியொருவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் சேதமடைந்த நிலையில் ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை கறுவப்பங்கேணியிலிருந்து மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்குப் பயணிகளை ஏற்றுவதற்காக சென்றவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவருகின்றது.

சடலமாக மீட்கப்பட்டவர் கறுவப்பங்கேணி, நாவலர் வீதியைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான மாசிலாமணி தர்மரெட்னம் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை பொதுமக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குறித்த சடலம் மீட்க்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கையின் சுதந்திரதினம் குறித்து மன்னாரில் விசேட கலந்துரையாடல்!



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வை மன்னார் மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடுவது தொடர்பாக முன்னாயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இந்த முன்னாயத்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலின் போது கடந்த சில வருடங்கள் கொவிட் தொற்று காரணமாகச் சுதந்திர தின நிகழ்வு மட்டுப்படுத்தப்பட்ட அளவு அதிகாரிகளுடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தற்போது கொவிட் தொற்றின் தாக்கம் சிறிதளவு குறைவடைந்து இருக்கும் நிலையில் இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வை மிகவும் சிறப்பாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 4 ஆம் திகதி காலை மன்னார் பாலத்தடியில் இருந்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் பாடசாலை மாணவர்கள் மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள் உடன் ஆரம்பமாகி மன்னார் மாவட்ட செயலகத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னதாக மன்னார் பாலத்தடியில் கடற்கரை பகுதியில் பாரிய சிரமதானம் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் மன்னார் மாவட்ட செயலாளர் அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் மேலதிக அரச அதிபர்கள், மன்னார் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பாதுகாப்புத் துறையினர் மற்றும் முப்படையினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதுதகவல்கள்வெளியாகியுள்ளன. அதனால் அந்தப் பேர்வழி பற்றியும் எழுத வேண்டியதாயிற்று.

தமிழ்ப் பொலிஸாரின் சிந்தனையில் இப்போதும் தமிழீழம் என்ற எண்ணமே உள்ளது என்பது இந்தப் பிரகிருதியின் கண்டுபிடிப்பு. அதை சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் அவிழ்த்து விட, அதை அந்தச் சிங்கள ஊடகம் ஆலாபரணம் பண்ண, இப்போது வடக்கு, கிழக்கு தமிழ்ப் பொலிஸாரின் நிலை அதோ கதியாகியிருக்கின்றது. தர்மசங்கடமாகியிருக்கின்றது.

இந்தச் செய்தி வெளியானமையை அடுத்து வடக்கு, கிழக்கில் பணியாற்றும் தமிழ்ப் பொலிஸார் ஒவ்வொருவர் குறித்தும் நுணுக்கமான விசாரணைகளை இராணுவப் புலனாய்வுத்துறை சல்லடை போட்டுத் துருவி மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

இந்தப் பொலிஸாரின் பின்புலத்தை அறிவதற்காக அவர்களின் வீடுகளின் அயலில் உள்ளோர், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் எல்லோரும் துருவப்படுகின்றார்கள்.

தங்களைக் குற்றவாளிகள் போன்ற பின்புலத்தில் புலனாய்வாளர்கள் பல இடங்களிலும் நோண்டுகின்றனர் எனத் தமிழ்ப் பொலிஸார் தத்தமது மேலதிகாரிகளிடம் விசனத்துடன் குறைபடுகின்றார்கள் என்றும் அறிய முடிகின்றது.

இந்த விடயத்தை பொலிஸ் தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று தங்கள் குழப்பத்தைத் தீர்த்து வைக்குமாறு ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்ப் பொலிஸார் தமது மேலதிகாரிகளிடம் முறையிட்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இனத்துக்கு ஒரு கோடரிக் காம்பு போதும், இப்படிக் குசும்பு வேலைகளைத் தூண்டி விடுவதற்கு...!

– மின்னல் –

## கைதான 55 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுவைதீவு அருகே கடந்த வருடம் டிசம்பரில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 55 பேருக்கான ஆறு மாதகால சாதாரண சிறை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவர்களது கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமையுடன் 5 வருட காலத்தில் மீண்டும் இலங்கைப் பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாகக் கைது செய்வதற்கும் நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்ட போது இந்தியமீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இலங்கை குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தின் ஊடாக இந்தியாவுக்கு அவர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும் நீதிவான் உத்தரவிட்டார்.

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரம் எழுதிவைப்பதால் சிறைக்கைதிகள் பாதுகாக்கப்படப்போவதில்லை. கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற தாக்குதல்கள், அச்சுறுத்தல் செயற்பாடுகள் குறித்து நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். இதனை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அதேபோல் இவ்வாறான ஒரு சில சம்பவங்கள் இடம்பெறுகின்ற காரணத்துக்காக ஒட்டுமொத்த சிறைச்சாலை கட்டமைப்பையும் தவறாகச் சித்திரிக்கவும் முடியாது.

சகல நாடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மாறாக இலங்கையில் மாத்திரம் இவை இடம்பெறுகின்றன எனக் கூறவும் முடியாது. எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் சகல தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு சிலர் மீது நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதையே ஜனாதிபதியும் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு தற்போது முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது குறித்து ஆராயும் விதமாக ஜனாதிபதியால் நிபுணர்கள் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. 42 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நீண்டகாலத்துக்கு இந்தப் பிரச்சினைகளை இழுத்தடித்துக்கொண்டு செயற்பட அரசு தயாராக இல்லை. பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வொன்று அவசியம் என்பதையே ஜனாதிபதியும் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தார். எனவே, அது குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் – என்றார்.

## சுவாசப் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமியின் உடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு – சாந்தை பகுதியைச் சேர்ந்த ரஷ்மிகா என்ற 4 வயது நிரம்பிய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## அரசியல் பழிவாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக பாகங்களாகப் பிரித்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. அபிவிருத்தியின் பிரதிபலன் நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் சரி சமமாகப் பகிரப்பட வேண்டும் எனவும் அவர் வலியு



றுத்தினார்.

நலன்புரி நடவடிக்கைகள் முன்னெடுப்பதன் காரணமாக ஒரு சிலர் என்னை விமர்சிக்கின்றனர். மக்களுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் அவர்கள் துக்கத்துடன் இருக்கின்றனர். அரசியல்வாதிகளும் பணம் படைத்தோர்களும் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வது தொடர்பில் எவரும் வாய்த்திறப்பதில்லை எனவும் அவர் கூறினார்.

முதலாளிமார்கள், பணம் படைத்தோர் பற்றி மாத்திரமின்றி சூறையாடலுக்கு உள்ளாகும் மக்கள் தொடர்பில் ஆராயும் எனது பொறுப்பை ஒருபோதும் கைவிடமாட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய ஊழியர் சங்கத்தின் முதலாவது நிறைவாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பல வருடங்களாகப் பல துயரங்களுக்கு மத்தியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பலர் உள்ளனர். நான் ஆட்சிக்கு வந்ததும் முதலாவதாக முன்னெடுக்கும் பணியானது அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்குசலுகைபெற்றுக்கொடுப்பதாகும். 1994ஆம் ஆண்டு முதல் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்ட அனைவருக்கும் சலுகை வழங்கியே தீருவேன் – என்றார்.

# கச்சதீவு வருடாந்தத் திருவிழாவை மார்ச் 11,12 இல் நடத்தத் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 26

கச்சதீவு வருடாந்தத் திருவிழாவை மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்துவது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வழமைபோன்று 10 ஆயிரம் பக்தர்களை அனுமதிக்க முடியாது எனவும், 500 பேரை மட்டுமே அனுமதிக்க முடியும் எனவும் சுகாதாரத் துறையினர் இறுக்கமான நிபந்தனை விதித்துள்ளனர்.

இதற்கமைய திருவிழாவை மார்ச் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்துவது எனவும், தற்போதைய கொரோனா அச்சம் காரணமாக தமிழ்நாட்டுப் பக்தர்களை அனுமதிப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மாகாணத்தில் தொற்றாளர் அதிகரிப்பு

### கொழும்பு சென்று திரும்பும் பலருக்கு கொரோனா உறுதி

தென்னிலங்கைக்கு பொதுப் போக்குவரத்தில் பயணித்து வடக்கு மாகாணத்துக்குத் திரும்புவோருக்கு கொரோனா நோய்த்தொற்று பரவலாகக் கண்டறியப்படுகின்றது என்று சுகாதார அதிகாரிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தருவோரிடம் கடந்த இரு நாள்களாக முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் பெருமளவானோர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை தகவல்கள் குறிப்பிட்டன.

தென்னிலங்கையில் நாளாந்தம் கண்டறியப்படும் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் வடக்கு மாகாணத்திலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றன என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்திகொழும்பு சென்று திரும்புவோரில் பலர் காய்ச்சலுடன் மருத்துவமனைகளுக்கு வருகை தரும் நிலையில் அவர்களுக்குக் கொரோனா நோய்த்தொற்றுள்ளமை கண்டறியப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் தேவையற்று கொழும்பு செல்வதையோ அல்லது பொதுப்போக்குவரத்தைத் தேவையின்றி பயன்படுத்துவதையோ தவிர்ப்பது மீண்டுமொரு கொரோனா அலையை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியும் என்று சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கண்டறியப்படும் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அடுத்து மருத்துவமனையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடலை மருத்துவமனை நிர்வாகம் ஒழுங்கு செய்துள்ளது.

# மணல் கடத்தல் கும்பல் மீது இராணுவம் துப்பாக்கிச்சூடு

### டிரக்டர் சாரதி கைது; ஏனையோர் தப்பியோட்டம்

யாழ்., கொடிகாமம் – கெற்பேலி பகுதியில் மணல் கடத்தல் கும்பல் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து மணல் கடத்தல் கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

மணல் கடத்தல் இடம்பெறுகின்றது எனக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் கடத்தல்காரர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தபோது தப்பியோடியுள்ளனர். இதையடுத்து துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.



சம்பவத்தையடுத்து டிரக்டர் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

டிரக்டரும் அதன் சாரதியும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ்.புதிய பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற – வீதிப் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பது தொடர்பான – கலந்துரையாடலில் கலந்து கொண்ட வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை பிரதிநிதிகளுடன் இவ்விடயம் தொடர்பில் அங்கஜன் எம். பி. விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டு, சேவை இடம்பெறாமலுள்ள யாழ் புதிய பஸ் நிலையத்தில் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் சேவைகள் இடம்பெற வேண்டும் என அங்கஜன் இராமநாதன் வலியுறுத்தினார்.

அரச நிதியை வீணாக்கும் வகையில், புதிய பஸ் நிலைய இயங்காமல் இருப்பதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கமுடியாது என தெரிவித்த அவர், தனியார் மற்றும் இ.போ.ச. ஆகிய இரு தரப்பினரும் இணைக்கப்பட்டுடன் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட, வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சிவராசா சிவபரன், முதற்கட்டமாக தமது சேவைகளை பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் அங்கிருந்து ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்தமையோடு, தம்மைத் தொடர்ந்து இலங்கைப் போக்குவரத்து சபையினரும் அங்கு சேவையில் ஈடுபடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் தமது தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்திய பின்னர் தமது சாதகமான நிலைப்பாட்டை தெரிவிப்பதாக இ.போ.ச. வட மாகாண பிராந்திய முகாமையாளர் செல்லத்துரை குணபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

# நிதியமைச்சரின் அறிவிப்பின் பின்னர் வாழ்க்கை செலவு வேகமாக எகிறல்!

கொழும்பு, ஜன.26

அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்து ஒரு மாதம் செல்லும் முன்னர் வாழ்க்கை செலவு பாரியளவில் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் இறுதியில் 12.1 வீதமாக அதிகரித்து காணப்பட்ட பண வீக்கம் டிசெம்பர் மாத இறுதியில் 14 வீதமாக மேலும் அதிகரித்தது. பணவீக்கத்தை அளவிடும் பொருள்கள், சேவை மற்றும் உணவுகளின் விலைகள் மிக வேகமாக அதிகரித்து வருவதே இங்கு முக்கியமானது.

கடந்த நவம்பர் மாத இறுதியில் உணவு வகை சம்பந்தமான பணவீக்கம் 16.9 வீதமாக காணப்பட்டது. அது டிசெம்பர் மாத இறுதியில் 21.5 வீதமாக வேகமாக அதிகரித்தமை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ தரவுகள் மூலம் வெளியிடப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்த கொடுப்பனவு அரசுக்கு சொந்தமான கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் மற்றும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

## விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க 400 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு!



விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 400 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனை அடுத்து 10 லட்சத்து 49 ஆயிரம் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி சாதகமான விளைச்சலைப் பெறாத விவசாயிகளுக்கு மாத்திரமே நஷ்டத்திற்கான இழப்பீடு வழங்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

## முல்லைத்தீவில் கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

முல்லைத்தீவு – கருநாட்டுக்கேணி பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மிங்கள் மாலை முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பகுதியில் வயலுக்கு செல்லும்போது கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதன்போது 48 அகவையுடைய குடும்பஸ்தர் ஒருவர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்வம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு விசாரணையை துரிதப்படுத்த நீதிமன்று பணிப்பு



பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை விரைவில் நிறைவு செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அனைத்து பரிசுத்தவான்களின் தேவாலயத்திலிருந்து கடந்த 11 ஆம் திகதி கைக்குண்டொன்று மீடகப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் முன்னெடுத்து வரும் நிலையில் இது தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கொழும்பு மேலதிக நீதிவானிடம் கடந்த 21ஆம் திகதி சுமார் ஒன்றரை மணிநேரம் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்கினார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற வைத்தியரின் வாக்குமூலங்கள் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஓய்வுபெற்ற வைத்தியருக்கு வெடிகுண்டு விற்பனை செய்த நபர் அம்பாந்தோட்டை ரன்ன பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள்: நீதி வேண்டி மனைவி தலைமுடி காணிக்கை



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தனது தலைமுடியைக் காணிக்கையாகச் செலுத்தியுள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள காளி கோவிலில், நேற்று காலை விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதன்பின்பு தனது தலைமுடியைக் காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டார்.

அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு - ஹொரணை தனியார் பஸ் ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

மக்கள் அவதி

கொழும்பு - ஹொரணை தனியார் பஸ் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்காரணமாக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

புளத்சிங்ஹளவிலிருந்து ஹொரணை வரை புதிய பஸ் ஒன்றை சேவையில் இணைத்துக்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## பொதுச் சந்தை மீது தாக்குதல் தண்ணீரூற்றில் மூவர் கைதாகினர்

முள்ளியவளை - தண்ணீரூற்று பொதுசந்தை மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தண்ணீரூற்று பொதுச்சந்தை மீது கடந்த 24 ஆம் திகதி அன்று அதிகாலை நான்கு பேர் கொண்ட குழுவினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதன்போது சந்தையின் காவலாளியான 60 வயதுடைய நபர் காலில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தையைக் குத்தகைக்கு எடுத்தமை தொடர்பில் எழுந்த பிரச்சினையின் விளைவாக நள்ளிரவில் வந்த கும்பல் ஒன்று அரச சொத்தான பொது சந்தைக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் உள்ள முள்ளியவளை உப அலுவலகத்துக்குச் சொந்தமான பொது சந்தையே இவ்வாறு சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முள்ளியவளை உப பிரதேச சபையின் பொறுப்பதிகாரி முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார். இவர்கள் தாக்குதல் நடத்தியமை சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ள நிலையில் ஆள்களையும் இலகுவாக அடையாளம் காணக்கூடிவாறு பதிவாகியுள்ளது.

இந்த நிலையிலேயே குறித்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாட்டை அச்சுறுத்தும் எலிக் காய்ச்சல் நோய்!

மக்களே அவதானம்

இலங்கையில் எலி காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன எனச் சுகாதாரப் பிரிவு எச் சரித்துள்ளது.

கடந்த வருடம் காலி மாவட்டத்தில் மாத்திரம் 476 பேர் எலி காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், 6 மரணங்கள் பதிவாகியுள்ளன என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

நோய் நிலைமை தொடர்பாகக் கவனத்திற்கொள்ளாமை மற்றும் வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறாமை என்பன எலி காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் என காலி மாவட்ட சமூக நல வைத்திய நிபுணர் அமில ஏரங்க சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது, வயல் பகுதிகளை அண்மித்து வசிப்பவர்கள் மாத்திரமன்றி நகர் பகுதிகளில் வசிப்பவர்களும் எலி காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2022இல் வெளியிடப்பெற்றது.